உ

சிவமயம்.

ஸ்ரீபால்வண்ணநாதசுவாமி துணை.

தென்கருவை

# ஸ்ரீபால்வண்ணநாதராகிய திருக்களாவீசர் பதிகம்.

# ஸ்ரீஒப்பனையம்பாள் பதிகம்

# ஸ்ரீவீரசண்முகநாதர் பதிகம்

இவை

குன்றக்குடி
மேலமடாதிபதிகளாகிய மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கணபதி சுவாமிகள்
உத்தரவின்படி


கல்லல்
ஸ்ரீமணிவாசக சரணாலய சுவாமிகளால்

இயற்றப்பெற்று

சதா-ம்ஆண்டு, இரக்தாட்சி-௵, ஆவணி-௴ ௧௭-௨ திங்கட்கிழமை
ஸ்ரீபால்வண்ணநாதர் சந்நிதானத்தில்
அரங்கேற்றப்பெற்று


கரிவலம்வந்தநல்லூர் சிவநேசச் செல்வர்
திருவாளர் ஆ. ம. மருதப்ப செட்டியாரவர்களால்

திரிசிரபுரம்
ஜெகம் அண்டு கோ., டாட்சன் அச்சாபீசில்
பதிப்பிக்கப்பெற்றன.

—

இரக்தாட்சி௵ ஆவணி௴ ௪௨

சிவமயம்.

திருச்சிராப்பள்ளி, பிஷப் ஹீபர் காலேஜ் தலைமைத் தமிழாசிரியர்
பண்டிதர், திருவாளர்
ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் இயற்றிய

## சிறப்புப்பாயிரம்.

---

பெருந்துறை யிடத்துக் குருந்துறு நீழலி
லிருந்திறை யருளிய வருந்தவ முதல்வர்
'பாண்டிநன் னாடே பழம்பதி' யெனுமா
மாண்டகு சிறப்பின் வழுதிநா டதிற்சிவ
வுருவைப் பரவுவோர் கருவைப் புகாதருள்
தருவைப் பனைய கருவைப் பதியம
ரிருக்களா வியசீர்த் திருக்களா வீசர்
விருப்புறு பதிகமும் மருப்புரி குழலா
ளொப்பனை யம்மையின் றிப்பியப் பதிகமும்
சூரனைத் தடிந்தருள் வீர சண்முக
நாதரா மெங்கள் போத குரவரின்
சந்தப் பதிகமும் தந்தன னம்மா
முன்னவில் பாண்டி நன்னா டதன்க
ணல்லற் பிணிதவிர் கல்லற் பதியிலே
யுறைபவ னாடா ளரையர்நற் குலத்தில்
வந்து தோன்றிய முந்துறு பெருமைய
னாயினுஞ் செல்வ மநித்திய மென்றே
பற்றறத் துறந்து நற்றவம் பூண்டோன்
அமிழ்தினு மினியதாய்த் தமிழ்மொழி யென்னும்
பாற்கடல் பருகிய சூற்கொண் மூவாய்க்
கவிமழை பொழியுந் தவலருஞ் சீரினன்
மறைமுடி காணுக் கறைமிடற் றிறைபா

லுத்தம பத்திச் சித்தமார் வித்தகன்
றமரநீர் வேலையிற் சமரசூர்த் தடிந்த
குமரநா யகன்பெய ரமரநா வளித்தோன்
சிவனடி யவரைப் பவநனி யறுக்குஞ்
சிவனென வேயுளந் தேறிவழி படுவோன்
முற்சமய மாஞ்சைவ சற்சம யத்துடன்
தமிழ்மொழி தழைக்கவுந் தரணியில் வாழ்தரு
மன்பதை யெல்லா மின்புற் றுயரவுங்
கனவிலு நனவிலுங் கருதி யிடையறு
துழைக்கும் பணியாற் றழைக்கு முளத்தன்
மணிவா சகசர ணாலய
அணிவா சகப்பெய ரருந்தவத் தோனே.

---

உ

சிவமயம்.

சிதம்பரம், ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் மடம்

ஸ்ரீலஸ்ரீ சிதம்பரசுவாமிகள் மாணுக்கன்

நாராயணசுவாமியால் இயற்றப்பெற்றது.

---

பாடல்சால் சிறப்பிற் பாதத் தோங்கிய
தோட்டலர் வேப்பந் தொடையது மிலைச்சிச்
செந்தமிழ்க் கழகமுஞ் சீர்சால் புலவரு
மந்தமி லாவகை யாதரித் தமர்ந்து
உலகமுழு தீன்ற வொருபெருங் குழவியாய்த்
தன்குலத் துதித்துத் தனியர சோச்சிய
மன்பெரும் பேற்றை மரூஉஞ் செழியர்
மநுமுறை புரந்த வழுதிநா டதனி
லொருதனி யோங்கிய திருவமர் பதியா
மன்னம் பலவமர் நன்னெடுங் கழனிப்
பல்வளம் பழுநிய செல்வ நன்னகர்க்

கருவா புரியினில் விரையார் களாநிழ
லருவுரு வகற்றி யருவுரு வடிவாய்
நாரகத் தினர்தம் நலிபிறப் பறுப்பா
னமர்ந்தரு ளிறையா மரன்பால் வணனல்
லடியவர் புக்கிலா மடிமல ரதனினு
மொப்பிலா வல்லியா முமையவ ளடியினு
மன்புக் கனிச்சுவை யாறதாப் பெருக
வருண கிரியெனுந் தருநிகர் பெரியோ
னருளிய திருப்புக ழதனிலோர் பாத்தனை
யன்பிலா துரைப்பினு மறமுத னான்கு
மங்கையி னெல்லி யதன்பய மென்ன
வீத்திடு மெங்க ளிறைவள்ளி காதலன்
வீரசண் முகனார் மெய்யடி தனக்குஞ்
சொற்சுவை பொருட்சுவை தொடைச்சுவை நயம்பட
ஞான்றெலாங் களிமது நாவல ராகும்
வரியளி யருந்துமா மாநவ ரசமும்
பொதுளிய பதிகந் தனித்தனிப் புனைந்தன
னன்னவ னாரெனி லறைகுவன் கேண்மோ
வன்புக் கணிகல னரனடி மறவா
தென்புநெக் குருகி யெழுந்தகண் ணீரே
யாறாப் பெருக்கு மாறாத் திருவனாம்
வாதவூ ரண்ணல் சீதமா ரடியினிற்
பதித்த சிந்தையன் மதித்த வாழ்க்கையன்
றமிழ்ப்பெரும் பத்தியன் றண்ணளி யுடையோன்
றமிழ்த்தல நோற்ற தவப்பய னாகியோன்
றுறவற நெறிபின னறமது குடிகொளூஉங்
கல்விநன் னகர்வாழ் கலைதேர் முனிவன்
மணிவாசகசரணாலயன் மாதோ.

உ
சிவமயம்.

# இராயகிரி முத்துப்புலவர் குமாரர்
# பாலவிலக்கணி அருணாசலப் புலவரால் இயற்றப்பெற்றவை.

## அறுசீரடியாசிரிய விருத்தம்.

---

நந்தரசங் கரன்பணியுந் தென்கருவைப் பால்வண்ண
நாதர் வெள்ளைக்
கந்தரசங் கரியாமொப் பனையம்மை வீரசண்மு
கத்தே வின்மேல்
அந்தரசந் தானநிக ரருண்மணிவா சகசரணு
லயப்பே ரண்ணல்
சந்தரதந் தரநிகழ்த்தும் பதிகம்போல்
வேறெவரும் சாற்றுவாரோ. க.

பன்னரிய ரத்தாட்சி யாண்டுவரு மாவணியிற்
பதினே ழாநாட்
டுன்னரிய பலபெரியா ரவைநடுவிற் பால்வண்ணர்
சோதிக் கோயின்
முன்னரிய தெனவமரர் முனிவருஞ் செவிபேற்று
மொய்த்துச் சூழத்
தன்னரிய பதிகமொரு மூன்றினையு மரங்கேற்றித்
தந்தான் மாதோ. உ.

அம்மையப்பர் குமரர்திருப் பதிகமிதி லொருகவியை
யன்பாய்க் கற்றோர்
பொன்மயத்தா மரைமகளுங் கலைமகளும் புயத்திருக்கப்
பொருந்தி மேலா
யிம்மையிற்பல் சுகம்பெருகி யிசைபெற வாழ்ந்து பொன்னாட்
டின்பந் துய்த்துச்
சின்மயப்ப ராபரன்றன் றிருவடிநீ ழலிற்கலந்து
திகழ்வர் மாதோ. ௩.

---

உ

சிவமயம்.

## கரிவலம்வந்தநல்லூர் பெண் பாடசாலை,

## பழங்கோட்டை ஸ்ரீமத் உபாத்தியாயர் இலட்சுமிநாராயணையர் குமாரர் ஸ்ரீமத் பூவநாதையரவர்கள் இயற்றியவை.

---

### வெண்பா.

வாசத்தா றேற்றவர்பால் வண்ணத்தார் தென்கருவை
வாசத்தா ரேற்றவர்பால் மன்னுவிசு—வாசத்தாற்
றண்டமிழ்த்தா ரீந்தனனாற் சத்தியரர் காரவுணத்
தண்டமிழ்த்தார் வேலவற்குந் தான்.

---

### அறுசீரடி விருத்தம்.

தேமணிவா சகத்தின்வழி செகத்திற்சை வமுந்தமிழுஞ்
சிறக்க வோர்சிந்
தாமணிவா சகமாகத் தந்தமகான் யாவனெனச்
சாற்றக் கேண்மோ
கோமணிவா சவன்பதமும் பரிகசிக்குஞ் சிவநேசர்
குழுவின் மன்பேர்
மாமணிவா சகசரணா லயமுனிகல் விக்கடலாம்
வள்ளன் மாதோ. க.

ரத்தாட்சி யாண்டுமதி யாவணியிற் பதினேழா
நாளிற் றிங்கள்
ஒத்தாட்சி புதனுறவு மத்தநாள் சுபமீன
வோரை தன்னி
னத்தாட்சி யான்பரவுங் களவீசர் சன்னிதியி
னுவல் லோர்கள்
அத்தாட்சி யதற்கதுவென் றேத்தவரங் கேற்றினனு
லழகாய் மன்னே. உ.

செப்பரிய சுவையினிமை பண்புநலம் பழுத்தொ ழுகுஞ்
சிறப்பு வாய்ந்திங்
கொப்பரிய தெனவுணர்ந்த பெரும்புலவோர் புகழேற்றே
யுலகி லோங்கு
மிப்பெரிய திறல்சேரும் பதிகமொரு மூன்றினையு
மிசைந்து பார்த்தோர்
வைப்பரிய தெனவுளத்தின் மன்னவைக்க வச்சிட்டு
வழங்கி ஞறல். ௩.

அன்னவன்யா ரெனிற்கருவை யம்பதியான் குணக்குன்றி
லமர்ந்து வாழ்வோன்
முன்னவனெம் பால்வண்ண னடிமறவா மூதறிவோன்
முற்றக் கற்றோ
னன்னெறியே பொருளீட்டும் புகழுடையோ னெவரிடத்து
நட்பு மிக்கோன்
பின்னெவரு மொழுக்கமுற வழிகாட்டி யாயுலகிற்
பிறந்து வாழ்வோன். ச.

நற்பிறப்பின் பயனிதுவே யெனவுணர்ந்து சிவனடியார்
நளிர்பொற் பாதம்
பொற்புறவே வணங்கியவர்ப் பூசித்துச் சோறளித்துப்
போற்றும் பூமான்
இற்பெருகு நன்மனையா னினியமக்கட் பேறுடையா
னிசையின் மிக்கான்
சொற்பெருகும் பெருஞ்செல்வ னறுமுகன்சேய் மருதப்பத்
தூயோன் மன்னே. ரு.



### கமலபந்த வெண்பா.

மாகனக போகமிக வாகதிக மாகசுக
மாகநக ரிந்திரன்போல் வாழ்பவனு—மோகமுறு
சோன்மருவு மின்னு றுலங்கவச் சிட்டீர்தான்
மன்மரு தப்பபூ மான்.

உ
சிவமயம்.

## தென்கருவை நகர் ஸ்ரீபால்வண்ணநாதராகிய

# திருக்களாவீசர் பதிகம்.

---

### விநாயகர் துதி.

திருவார் கருவைச் செழுங்களா வீசர்
வருவார் வினைதீர்க்கும் வள்ளல்—குருவாரும்
பால்வண்ண நாதர் பதிகந் தழைக்கவருள்
மால்வண்ண யானைமுக வா.

### இதுவுமது.

திருவார் கருவைச் செழுங்களா வீசர்
குருவாரெம் பால்வண்ணக் கூத்தர்—திருவடிக்குச்
சூட்டும் பதிகந் துலங்கவுயர் சொற்பொருளைக்
காட்டுங் கணபதிபொற் கால்.

### ஆசிரிய விருத்தம்.

திருமருவு மார்பனந் தேமருவு தாமரைத்
திசைமருவு முகனி னியநற்
சீர்மருவு மிந்திரன் வளமருவு வழிவழிச்
செயன்மருவு தொண்டி னைத்துக்
குருமருவு மலரடிக் குணமருவி யுளமதிற்
குளிர்மருவ வேத்தெ டுப்பக்
குலமருவு மளகையிற் குடிமருவு தனதர்பொற்
குவைமருவ வந்து பணிய
வுருமருவு திருவாயி லொளிமருவு பொற்பிரம்
பொடுமருவி நந்தி நிற்க
வுண்மருவு தேவர்முனி வருருச்சி கரமருவி
யுரிமையொடு தொழுது பரவ
மருமருவு குழலொப் பிலாவல்லி யிடமருவ
மணிமருவு கருவை நகரின்
மலருங்க லாவீசு மதியஞ்சி காமேவி
வளருங் களாவீசனே க.

ஒளிமருவு செஞ்சடையி னுடன்மருவு பொற்கொன்றை
பொண்மருவு மத்த மறுக
சூழ்மருவு பையரவ மளிமருவு வெள்ளெருக்
கொடுமருவு தண்க ரந்தை
வெளிமருவு வானாறு கதிர்மருவு வெண்பிறையின்
வின்மருவி யழகு செய்ய
விடமருவி யொளிர்மிடறு தனின்மருவு தலைமாலை
வெயின்மருவு சூல மழுமான்
களிமருவு நகுதலைநன் மணிமருவு தொடையென்பு
கவினவுயர் துடிவி ளங்கக்
கவின்மருவு திருமுகத் தருண்மருவு கண்மலர்க்
கான்மருவு கழலொ லிக்க
வளிமருவு குழலொப் பிலாவல்லி யிடமருவ
மணிமருவு கருவை நகரின்
மலருங்க லாவீசு மதியஞ்சி காமேவி
வளருங் களாவீசனே. ௨.

பொலன்மருவு குடுமிப் பொருப்பென விளங்குநற்
புகழ்மருவி விண்ணு லகினிற்
புகமருவி வளரொளி துளும்பிடக் கதிர்மருவு
பொன்விமா னந்தி கழ்வுறும்
நலன்மருவு பொற்கோயி னடுமருவு மரியணையி
னளிர்மருவு கனக பீடம்
நனிமருவு கருணைபொழி முச்சுடர் கதிக்கவெகு
நயமருவு முகம லர்ந்தே
கலன்மருவு மணிமுடிக் கரிமருவி யொருபுறங்
கான்மருவி யுறவ டியவேல்
கைமருவு பசியநற் சிகைமருவு மயின்மிசைக்
கழன்மருவு கந்த னணைய
வலன்மருவு மடியொப் பிலாவல்லி யிடமருவ
மணிமருவு கருவை நகரின்
மலருங்க லாவீசு மதியஞ்சி காமேவி
வளருங் களாவீசனே. ௩.

புவிமருவி யருகுறும் புனன்மருவி யலைதரும்
பொன்றரள மருவி மணமார்
பூமருவி நாரணன் கரமருவு சங்கெனப்
புதியபணி லங்கண் மருவிச்
சவிமருவு மணியினங் களுமருவி மான்மதஞ்
சந்தனக் குறடு மருவித்
தழன்மருவி நற்புகை யினைத்தரு மகிற்றுணிக
டமைமருவி வரைய டியுறுங்
கெவிமருவு கரிமருப் பினைமருவி யுள்ளக்
கிளர்ச்சிதனை மருவி யன்பிற்
கிட்டுவோர் தமைமருவி நன்மைதரு சேமநதி
கெழுமுவள மிலக வினையை
வவிமலரு மடியொப் பிலாவல்லி யிடமருவ
மணிமருவு கருவை நகரின்
மலருங்க லாவீசு மதியஞ்சி காமேவி
வளருங் களாவீசனே. ௪.

பொழின்மருவு மழைதரும் புனன்மருவி நிலவளம்
புகழ்மருவ மிகவ ளரவே
பொய்மருவு முளமிலா நமைமருவி யாவரும்
புண்ணியந் தனைம ருவிவா
னெழின்மருவு நின்மலர்க் கழன்மருவி நாளு
ளியற்றுபணி மருவி யொப்பி
லின்மருவி நெஞ்சினிற் களிமருவி வாழ்வுபெற்
றிசைமருவி வாழ்வி தென்றே
விழிமருவு கண்ணிய விழாமருவி நின்றெண்டின்
மேன்மருவு மனம ருவியே
வியமருவி யுளரெனத் திசைமருவு பேர்மருவி
மேலான குடிகள் வாழும்
வழிமருவு கழலொப் பிலாவல்லி யிடம்மருவ
மணிமருவு கருவை நகரின்
மலருங்க லாவீசு மதியஞ்சி காமேவி
வளருங் களாவீசனே. ரு.

பகன்மருவு மொளிதரும் பான்மருவு வடிவுடைப்
 பரமநின தடிம லரெனும்
பதமருவி யின்புறத் தினமருவி வருமுனிவர்
 பண்ணவர்க ளன்பின் மருவி
யிகன்மருவி யிடர்செய்யும் வல்வினைக் கூட்டங்க
 ளினிமருவி டாத கற்றி
யெண்மருவு பொருளளித் தினிமைதரு நின்பதத்
 தெய்திமரு வப்பு ரந்தாய்
நகமருவி மதலையென நளிர்மருவு கடன்மருவி
 நான்முக னளித்த தக்கன்
நன்மனையின் மருவிவே றிடமருவ வெனவுன்னும்
 நலமருவு பெரிய வழுதி
மகமருவு முமையொப் பிலாவல்லி யிடமருவ
 மணிமருவு கருவை நகரின்
மலருங்க லாவீசு மதியஞ்சி காமேவி
 வளருங் களாவீசனே. சு.

பண்மருவு தமிழ்மறைப் பாமருவு நாவினர்கள்
 பதமருவி யிரும ருங்கும்
பண்புநல மருவவிசை மருவவே கொட்டியின்
 படிமருவ வருளி நிற்க
வெண்மருவு மாகமத் தலைமருவு மாசிரிய
 ரினிமைய து மருவ வருள
வெழுதாத சொன்மருவு மறைமருவு வேதியர்க
 ளின்சந்தை மருவ வோதத்
தண்மருவு பல்லியங் களுமருவி நின்றே
 தழங்கிடப் பரத மருவத்
தகைமருவு மரியணையி லெழின்மருவு கொலுமிசைத்
 தான்மருவல் புகல வெளிதோ
வண்மருவு கழலொப் பிலாவல்லி யிடமருவ
 மணிமருவு கருவை நகரின்
மலருங்க லாவீசு மதியஞ்சி காமேவி
 வளருங் களாவீசனே. எ.

தென்மருவு மிசைபாடி நறைமருவி யுண்டளிக
    டினமருவு களவி னீழற்
றேமருவு முடிதிகழ் முகமருவி லிங்கமாச்
    சீர்பெற விருந்த முதலே
யின்மருவு மொழியுமைக் கெழின்மருவு மிருவடிவ
    மேர்மருவ வருளு தலைவா
வியன்மருவு குறுமுனித னணிமருவு பூசனைக்
    கெதிர்மருவி நின்ற விறையே
சொன்மருவு நாவினிற் றுதிமருவு மந்தாதி
    தொடைமருவ நின்ன டியினிற்
சுவைமருவ வணியுமிறை வரதுங்கர் சேயெனுஞ்
    சொன்மருவ வென்று முள்ளோய்
மன்மருவு கழலொப் பிலாவல்லி யிடமருவ
    மணிமருவு கருவை நகரின்
மலருங்க லாவீசு மதியஞ்சி காமேவி
    வளருங் களாவீசனே. அ.

நினைமருவு பாலனுக் கெதிர்மருவு கூற்றவனை
    நேர்மருவி யன்று தைத்தாய்
நெற்றிதனின் மருவுவிழி தனின்மருவு மழலினா
    னின்றவே டனையெ ரித்தாய்
வினைமருவி வருசலந் தரனுடலம் வீயவே
    விரன்மருவு வளைவின் வென்றாய்
மிகைமருவு முப்புரந் தழன்மருவ மூவரும்
    மெய்மருவ வரமளித்தாய்
எனைமருவு வினைதகித் துனைமருவி நின்பதத்
    தெழின்மருவ வருளல் பெரிதோ
விணைமருவ கில்லாத பால்வண்ண நாதனே
    யிகமருவ வுரிய பொருளே
வனைமருவு கழலொப் பிலாவல்லி யிடமருவ
    மணிமருவு கருவை நகரின்
மலருங்க லாவீசு மதியஞ்சி காமேவி
    வளருங் களாவீசனே. கூ

செப்பரிய வருண்மருவு கருணைவிழி மருவுமெந்
 தேவநின் னடிம ருவிடுஞ்
சிறியனே னுளமருவு விண்ணப்ப மொன்றுநின்
 செவிமருவி யருள்பு ரிகுவாய்
ஒப்பரிய தெனமருவ நீமருவி யாண்டதோ
 ரொளிமருவு தமிழு முதலா
மூனமருவி யோலிடுந் தேமருவு சைவமு
 மூலகவர்கண் மருவி முற்போல்
வைப்பரிய தெனமருவி வளர்வுசெய நின்கிருபை
 வளமருவ வருளல் வேண்டும்
மாமகளு மருவவளர் பாமகளு மெனமருவ
 வரமருவி யருளே யனே
மைப்பரவு விழியொப் பிலாவல்லி யிடமருவ
 மணிமருவு கருவை நகரின்
மலருங்க லாவீசு மதியஞ்சி காமேவி
 வளருங் களாவீசனே. ய.

திருமருவு தென்கருவை நகரந் திருக்கோயில்
 செய்யகோ புரமும் வாழ்க
சீர்மருவு பால்வண்ண நாதரடி யொப்பனைத்
 தேவியடி நாளும் வாழ்க
கருமருவு கொண்டலுங் காசினியு மேலான
 கற்புமங் கையரும் வாழ்க
கவின்மருவு முத்தமிழ்க் கடலுமுயர் சைவமுங்
 காதலொடு நாளும் வாழ்க
மருமருவு முடிசூடு தமிழரசர் வருக்கங்கள்
 மாநிலத் தோங்கி வாழ்க
வளமருவு திருமுறைத் தொகுதியுட னவைதந்த
 மாலெழிற் குரவர் வாழ்க
குருமருவு சிவனடியர் கூட்டமுஞ் சிவபிரான்
 கோயில்களு மென்றும் வாழ்க
குலவுதமிழ் நாடிரவி மதிவாழ்க வாழ்கவே
 குவலயத் தென்று மாதோ.

முற்றும் சுபம்.

உ
சிவமயம்.

## தென்கருவை நகர்

# ஒப்பவணையம்பாள் பதிகம்.

---

### விநாயகர் துதி.

மைப்படியுங் கண்ணி வளருந் திருக்கருவை
யொப்பனையெ னம்மை யுமையடிக்குச்—செப்பு
மினிய தமிழுக் கியற்பொருளை நல்குந்
தனியானை செம்பொற் சரண்.

இதுவுமது.

பொற்பார் கருவை புரக்கும் புராதனியெம்
அற்பாரு மொப்பிலா வம்மையடிக்—கிற்பாத்
துற்றுந் தமிழ்க்குத் துணைபுரியு மேழையுளம்
பற்றுங் கரிபொற் பதம்.

திருவுலவு புவிமகளி னொருதிலக மெனவளர்வு
திகழ்வழுதி பதிய தனிலே
செறிவுதரு மருதமுலை மலையுதவு பலபொருள்க
டினம்வளர வளர நலமே
பெருகியுயர் கருவைநக ரதனிலுறு மவரதிக
பிரியமுட னினித ணுகியே
பிழையகல மனமுருகி வழிபடவு மவரிதய
பிணியகல நனிய ருளியே
வுருவுலவு பலகுடுமி யுயரவளர் கனகமணி
யொளிருதளி யதின டுவணே
யுவமையில தெனமறைக ளறையவள ரதிகவெழி
லுலவவளி சுழல மிகவே
மருமருவு களவினடி திகழுமிறை யவர்தழுவ
வருமுலைகொ டுழுது தினமே
வளருமெய்ப் பொருளிம்மை யருளும்பொற் கழலெம்மை
மலருமொப் பனையம் மையே. க.

கரியமுகி லரியகுழல் வரியவளி கருணைவிழி
கவினுமரை மதிய நுதலே
கவிதனுசு புருவமண நுகருவழி குமிழமலர்
கனியுமித ழுயர்ப வளமே
தெரியுநகை தளவமுகை யதுநிறைய மதுவொழுகு
செறிகுமுத மினிய திருவாய்
திகழுமுக முழுமதிய மலதுமலர் கமலமது
சிவணுமுயர் செவிவ ளையதே
யரியகமு கதுமிடறு குழலினொலி மொழிகழைகை
யலருமரை யிருமு லையதே
யமுதகுட மிடையுமின னடையுமரி யடியுமலை
ரழகெனினு மவைநி கருமோ
வரியளிகொள் களவினடி திகழுமிறை யவர்தழுவ
வருமுலைகொ டுழுது தினமே
வளருமெய்ப் பொருளிம்மை யருளுபொற் கழலெம்மை
மலருமொப் பனையம் மையே. உ.

கதிர்பரவு மணிமுடியி னழகுமிரு செவிதழுவு
கருதுகுழை யழகு மொளியே
கவினுமுயர் கனமதனி னிலதுபணி யழகுமெழில்
கனியுமுக வழகு மணிசேர்
நிதியுதவு கரமதனி னர்வுவளை யழகுமினி
நிகரிலெனு மலைய ருவிபோ
னிதமுயரு முலையதனி லசைதரள வடவழகு
நிலவுகலை யுடைய ழகுமே
லதிகவிலை யிழைகொடுசெய் தணியினிழ லுலவவள
ரரியவுடை யழகு மறையே
யழகினெடு பரிபுரம தெனவளரு மடியழகு
மடிமைவிழி நிறைய வருவாய்
மதிதவழு களவினடி திகழுமிறை யவர்தழுவ
வருமுலைகொ டுழுது தினமே
வளருமெய்ப் பொருளிம்மை யருளுபொற் கழலெம்மை
மலருமொப் பனையம் மையே ௩.

அரவணையி னினிதுதுயில் கொளுநெடிய னகன்மருவு
மலர்மகளு மவன ருளவே
வவனிதரு மயன்மருவு கலைமகளு மிருபுறமு
மணிகவரி புரள முறையே
விரவியுற வுயர்தருவி னிழலரசு தழுவுசசி
மிகவணுகி யடிவ ருடவே
வியமுடைய சுரகணிகை யவர்நடன மதுபுரிய
விரவுசுர மகளிர் பலபே
ரிரவிபல வெனுமொளிசெ யடிமலரின் மலர்சொரிய
வெழுகனியர் மதுமொ ழியவே
யிலகுகுடை கவிகைசெய வரியணையி லமருமுன
தெழிலுரைசெய் பவரு முளரோ
வரமுயரு களவினடி திகழுமிறை யவர்தழுவ
வருமுலைகொ டுழுது தினமே
வளருமெய்ப் பொருளிம்மை யருளுபொற் கழலெம்மை
மலருமொப் பனையம் மையே. ௪.

குருகுலவு பொழிலெழில்செய் பிரமபுர மதனில்வரு
குருவெமது சமய குரவர்
குமரனிவ ரெனவுலகு புகழவளர் மறைமுதல்வர்
குலவுகவு ணியர்க ளிறைவ
ருகுலவு தடமதனி லருவிவிழி சொரியவவ
ணழுகவிறை மொழிம ருவியே
யரியதமிழ் மறைமறையு முலையதனில் வருமமுத
மதனையுயர் புலநெ றியொடே
யுருகியவ ருணவருளி யிலகுதமிழ் மறையதனை
யுலகமுண வினித ருளியே
யுதவியவெ னனையுனது கருணைதனை யெவரறிவ
ருரியவர்க ளறிவ ரமையே
மருவுலவு களவினடி திகழுமிறை யவர்தழுவ
வருமுலைகொ டுழுது தினமே
வளருமெய்ப் பொருளிம்மை யருளுபொற் கழலெம்மை
மலருமொப் பனையம் மையே. ரு.

உனதடியை வழிபடுவ ரினியுலகில் வருபிறவி
யொழியவரு ளுதவு பவனீ
யுலகமதின் முதலையென விதியுயரு மலைவழுதி
யொருவனே னிடைம ருவியே
யினமதுறு புகழினொடு வளருமுறை யினையுலக
ரினிதுணர விலைய றைகுவே
னெனமுறைய தெனினவனி நலமடைய வினியதமி
ழெழிலடைய வெமது சிவனுர்
தனதுரிய சமயநெறி யுயர்வடைய மறுநெறிக
டணிவடைய நினையி னிதொடே.
தருபவர்க ளருளடைய வருகருணை யலதுமறு
தகைமையெது மிலையெ னனையே
வனமருவு களவினடி திகழுமிறை யவர்தழுவ
வருமுலைகொ டுழுது தினமே
வளருமெய்ப் பொருளிம்மை யருளுபொற் கழலெம்மை
மலருமொப் பனையம் மையே. ௬.

வினைமருவி வருபிறவி பலவதனின் மனிதர்வழி
விரவிடுத லருமை யெனவே
விரியுலகின் வளரறிஞ ருரையதனை நினதடிமை
மிகவறிவ னறிவ னெனுமே
யுனையறியு மறிவுசிறி தொருபொழுது மனமதனி
லுதயமிலை யவநெ றியதே
யுரியதென வவனிதன முலைமகளிர் வழியதனி
லுலவிவெகு துணிவி னுடனே
யெனைமருவி யுழலவிடு மிதன்வலிமை குறைவுபெற
வினிதருளி நலம தியினு
லிகமறுமை யெழுமையினு நினதடியை முடியணிய
வெனதுமன மதைய ருளுவாய்
வனமருவு களவினடி திகழுமிறை யவர்தழுவ
வருமுலைகொ டுழுது தினமே
வளருமெய்ப் பொருளிம்மை யருளுபொற் கழலெம்மை
மலருமொப் பனையம் மையே. ௭.

அருநெறிய சரியைநிலை கிரியைநிலை வளியினிலை
யணியபுல னெறிநிலையிலே
யணுகிமுறை மருவியதி னொழுகியுன தடிபடைய
வறிவுவலி யிலைய தையலா
லொருநெறிய தனின்மனது செலநிறுவி நிலைபெறவு
முறுதியிலை பிறிது வழியா
லுனதுதிரு வடியடைய வழியுமிலை யெனதுக்குறை
யொருவுமுறை தெரிய விலையே
கருநெறியி லுறவிடுதல் கருணையல வினியமுது
கதறுவது தீணிவு தெரிவாய்
கனகமணி நிழல்பரவு மரியணையி லினிதமரு
கருணைவடி வெனுமெ னன்னையே
மருமருவு களவினடி திகழுமிறை யவர்தழுவ
வருமுலைகொ டுழுது தினமே
வளருமெய்ப் பொருளிம்மை யருளுபொற் கழலெம்மை
மலருமொப் பனையம் மையே. அ.

வலியுடைய கருடவிறை யிவருமரி வளர்வுதரு
வளமுடைய பதமு மதலான்
மலரினுறு பிரமன்வள ருயர்பதமு மணியதரு
மணிநிழலி லமரு திறலா
ரொலிபரவு தொடையலணி சுரவரச னுறுபதமு
முனதுதிரு வடிப ரவுவோ
ருனுமுனமு னெதிரில்வரு மதுகருதி மதியழியு
முலகர்திற மெனநி விலுவேன்
நலிவுதரு பிறவியென நவிலுமுரை சரதமினி
நளிருமுன தடிப ரவவே
நணுகுமுயர் பவமதெனி னதுமிகவு நலமதென
நனிபெறுவ னினித ருளுவாய்
மலியுமுயர் களவினடி திகழுமிறை யவர்தழுவ
வருமுலைகொ டுழுது தினமே
வளருமெய்ப் பொருளிம்மை யருளுபொற் கழலெம்மை
மலருமொப் பனையம் மையே. கூ.

உலகிலுறு பலகலியு மொருகடிகை தனிலொருவு
முனதடியி லடியன் விழைவோ
டுரைசெயுமெ னுரையதனை யுறுகருணை யொடுசெவியி
லுறவருளி யருள்பு ரிகுவா
யிலகுமுன தருணிறையு முயர்தமிழு மெழிலிலகு
மினிமைதரு சமய மதுசா
ரியனென்றியு முயர்வுபெற விதுதருண முனதருளை
யெதிர்கருதி மெலிவ துறலா
லலகில்புகழ் தமிழுலக முறுமெலிவை விரைவினொடு
மகலவினி தருளி யளியா
லவனிபெறு பிறவிநல மடையவெணு முறுவிழைவை
யடையவருள் புரிவை யனையே
மலர்மருவு களவினடி திகழுமிறை யவர்தழுவ
வருமுலைகொ டுழுது தினமே
வளருமெய்ப் பொருளிம்மை யருளுபொற் கழலெம்மை
மலருமொப் பனையம் மையே. ம.

அணிமருவு வழுதிநா டதுவாழ்க வுயர்கருவை
யம்பதியெ நாளும் வாழ்க
வைந்தொழிற் கிறையான பால்வண்ண ரொப்பிலா
வம்மையடி மலரும் வாழ்க
பணிமருவு கோவிலுங் கோபுரமு முயர்வினொடு
பாரதனி லென்றும் வாழ்க
பகரரிய முத்தமிழு நற்சைவ சமயமும்
பண்பரவு முறையும் வாழ்க
தணியாத தமிழ்நாடு நீடூழி வாழ்கநற்
சாதுசன மடியர் வாழ்க
தண்முகிற் குலம்வாழ்க மண்வாழ்க விண்வாழ்க
சதுமறையெ நாளும் வாழ்க
மணிமுடித் தமிழரசர் குழுவாழ்க கருவைநகர்
மன்னிடுங் குடிகள் வாழ்க
மதியிரவி வாழ்கமநு நெறியறந் திகழ்வினொடு
வாழ்கவெந் நாளு மாதோ.

முற்றும் சுபம்.

உ

சிவமயம்.

தென் கருவை நகர்

# ஸ்ரீ வீரசண்முகநாதர் பதிகம்.

---

### விநாயகர் துதி.

சீராருந் தென்கருவைத் தேவன்பால் வண்ணினருள்
தாராருந் தோள்வீர சண்முகற்கு—நாராருஞ்
செந்தமிழைச் சாற்றச் சிறந்தென் னகத்தருளும்
ஐந்துகரத் தானை யடி.

### இதுவுமது.

பூவார் களவிற் பொலிந்துவளர் தென்கருவைத்
தேவார்பால் வண்ணாருள் சேயாமென்—றுவாரும்
வீரசண்மு கப்பெருமான் மெல்லடிக்குச் சூட்டுதமிழ்க்
கோளிக்கு மோர்கொம் பிறை.

### ஆசிரிய விருத்தம்.

சந்தப்பாவினம்.

[தானான தந்ததன தானான தந்ததன தானான தந்த தனனா]

சீரேறி நின்றுவளர் வானேறு தென்கருவை
தேனேறு கொன்றை மிலேவோர்
சேயாகி வந்துலக மீதேந டந்தடியர்
தேடாத டைந்த ருளுவோய்
தாரேறி யொன்றுபுய வீராத டம்பரவு
தாய்மாறி மங்கை யர்கள்பால்
தானேய ருந்திவளர் கோனேப ரங்கருணை
தானேறு துங்க முகவா
வாரேறி யம்பொலிசெய் தாரார்கு ரும்பைமுலை
மாதாக னிந்த புதல்வா
வாசாக யிங்கிரிய மாயேதி ரிந்திடுவர்
வாழ்வேசி றந்தி டுவரோ

வேரேறு குன்றைமலை மீதேயி ருந்துதிகழ்
வேதாப ணிந்த கழலோய்
மேருவிண் மகன்வேலை வாழமண் மகனுய
வீரசண் முக நாதனே. க.

[தானதன தானதன தானதன தானதன தானதன தான தனனு]
தேனெழுகு மாலைதிக ழாறுமுடி சோதியது
சேருமுக மாறி லகவேல்
தீரமுள் தானபடை யார்கரமி ராறுதிசை
தேடியொளி வீசி யுறவே
கானெழுகு பூமலர நீடுகழ லாருமடி
காணுமெழி லேற வணைமேல்
காதன்மிகு மாதிருவர் மேவியுற வாடுக
லாபமிசை யேறி முறையே
பூனெழுகு வாளிளைய வீரருட னேதுணைவ
ரோகையொடு மேவி யுறமா
லோதுமறை வேதனரி யாதிமுனி தேவர்கரு
ஆலமென வேவ ளருவோய்
மீனெழுகு வாரிதியின் மேவசுர னுவிகெட
வேலைவிடு தீர குமரா
மேருவிண் மகன்வேலை வாழமண் மகனுய
வீரசண் முக நாதனே. உ.

[தத்ததந் தத்ததன தத்ததந் தத்ததன தத்ததந் தத்த தனனு]
மொய்த்தபைந் தொத்தலர மைக்குலம் பற்றுபொழின்
முட்டிவிண் டத்தி யுறவான்
முத்துமம் பொற்றுவரு மொக்கவந் தெற்றருவி
முற்றினுஞ் சுற்றி வரவேர்
பைத்தபைம் பொற்றருவி னுற்றிழிந் திட்டநறை
பற்றியுண் டொட்ட ளிகளோ
பக்கமொன் றிச்சுழல மிக்குயர்ந் தெட்டியொளி
பற்றுமம் பொற்ற ணிகையா
மெய்த்ததுங் கக்கிரியி லுற்றடைந் தித்தரையர்
வெப்பமின் றித்தி கழுவே

மெத்தவுந் தட்கருணை வைத்தவெங் கூட்கினிய
விச்சைதந் திட்ட குமரா
மித்தையென் றித்தரணி யைக்கொளுஞ் சித்தமருள்
வெற்பினின் றுற்ற ருளுவோய்
மேருவிண் மகன்வேலை வாழமண் மகனுய
வீரசண் முக நாதனே. ரு.

[தத்ததத் தத்ததன தத்ததத் தத்ததன தத்ததத் தத்த தனனு]
வெட்டவெட் டத்தளிர்கள் விட்டுவிட் டுக்கெழுமி
மிக்குமிக் குக்கொ டிகளாய்
மெத்தமெத் தத்தழைவி ஊக்குலத் தைச்சிதறு
வித்தணைத் துத்தி னமுமே
மட்டுடைத் துப்பரவு புட்பமொய்த் துப்பணிகு
வர்க்கினித் தக்க ழலிலே
வைத்தலுத் துத்திரியு மெற்குநற் றட்கிருபை
வைப்பளித் துக்கொ ளுவையே
கொட்டமிட் டுப்பொருது துட்டர்பட் டுத்தலைகள்
கொக்கரிக் கக்க ழுகுபேய்
கொட்டிநிற் றுப்புலவு துய்க்கவுய்த் துக்களிகொள்
கொற்றகட் கக்து ருபரா
விட்டுமற் றப்புலவர் கட்டமற் றுத்திகழ
மெய்ப்பதத் தைத்த ருபவா
மேருவிண் மகன்வேலை வாழமண் மகனுய
வீரசண் முக நாதனே. சு.

[தந்தனந் தந்ததன தந்தனந் தந்ததன தந்தனந் தந்த தனனு]
கொண்டறுஞ் சும்பொழில்கள் விண்டயங் கும்பொலிவு
கொண்டரும் புஞ்சினையிலே
கொங்கலர்ந் தெங்குமுற வின்பமென் றும்பருகு
கும்புறுந் தென்க ருவைவாழ்
பண்டயங் கும்பெரிய வின்பமொன் றுங்கிளவி
பங்கெனுஞ் செண்டு முலையார்
பங்கிருந் தம்புயம ணைந்தணைந் தொன்றவளர்
பண்டான் றந்த முருகா

குண்டலம் பைப்பொனணி கங்கணங் கண்டிமணி
கொந்துறுந் தண்ட ரளமேல்
குஞ்சியுந் தொங்கன்முடி தண்டையுங் கிண்கிணி
குலுங்கநின் பைஞ்சி கியிலே
விண்டயங் குங்குட மொன்றிடுந் துங்ககொடி
மென்பதம் பொங்க வருவாய்
மேருவின் மகன்வேலை வாழுமண் மகனாய
வீரசண் முக நாதனே. ரு.

[தந்தான தானதன தந்தான தானதன தந்தான தான தனனா]
கந்தாகு மாரிதரு மைந்தா விராலிமலை
கண்டேறி யாடு மிளையோய்
கம்பாழி யோடுதுயில் விண்டான மான்மருக
கன்றூத நாவ லவரே
சிந்தோடு தாழிசைக ளந்தாதி பாடவவர்
சிந்தாகு லாதி யறவே
சிங்கார மானவடி தந்தேப ராவவருள்
செந்தூரின் மேவு முருகா
விந்தோடு வாளரவு நின்றாடு மாதியிறை
யின்போடு தேடு மதலாய்
யென்றேனு நீயருள்வை யென்றேவி டாமலுனை
யென்றேப ராவி யுளனான்
வெந்தோடை வீழுமுயர் தொண்டான கீரன்வினை
விண்டோட வேயருள்பவா
மேருவின் மகன்வேலை வாழுமண் மகனாய
வீரசண் முக நாதனே. சு

[தந்ததன தந்ததன தந்ததன தந்ததன தந்ததன தந்த தனனா]
மஞ்சுகுழ லிந்துநுத லெண்டனுசு வண்புருவ
மன்றலறி துண்ட மதுவே
வந்தகுமிழ் வண்டுவிழி கண்டுமொழி தண்டரள
மண்டொளிசெய் தண்டு மெயிறே
கஞ்சமுயரிந்துமுக மம்பவள மந்தவிதழ்
கம்புகள மொன்று செவியே

கண்டவளை செங்கைகழை கும்பமுலை தந்துவிடை
 கம்பமதி ரண்டு துடையே
பஞ்சடியெ னும்பலவ றைந்துமயன் மங்கையர்கள்
 பங்கினிலு மூன்று தினமே
பங்கமுறு மென்குறைவ கன்றனது செஞ்சரண
 பங்கய மிறைஞ்ச வருள்வாய்
விஞ்சுபுகழ் தென்கருவை தங்கிவள ரெங்களிறை
 வென்றிபுனை துங்க முருகா
மேருவின் மகன்வேலை வாழுமண் மகனுப
 வீரசண் முக நாதனே, எ.

[தத்தத் தனத்ததன தத்தத் தனத்ததன தத்தத் தனத்த தனனு]

எட்டுக் குலக்கிரிக ளொட்டுக் கடக்கரிக
 ளெட்டுப் படப்ப ணிகளோ
டெட்டிப் படச்சிகைவி ரித்துச் செருக்கதற
 வெற்றிப் படப்ப டெனவே
முட்டித் தகர்த்துவரு கொற்றச் சிகிப்பிடரின்
 முற்றப் பரிக்க வருளார்
முக்கட் பரற்கினிமை துற்றக் களித்துலவு
 முத்திப் பொருட்கு மரனே
மட்டிக் கினித்தமொழி சொற்றுப் பொருட்கவர
 வட்டத் தனத்தை விலையே
வைத்துத் தெருக்கடனி லுற்றப் பரத்தையர்கண்
 மச்சத் திலுற்று மூல்வனே
வெட்டித் தொலைத்தசுர ரொக்கப் படச்சரிகை
 வெற்றித் துரைக்கு முதல்வா
மேருவின் மகன்வேலை வாழுமண் மகனுய
 வீரசண் முக நாதனே. அ.

[தனனதன தனதான தனனதன தனதான தனனதன தன தானனு]

கனகமணி முடிமேவு மொளிதிகழ வினிதான
 கருணைவிழி தனி னுடியே
கழுகுமலை பொழிலுலவு பழநிமலை யுயர்வானு
 கதிர்குமர மலை யாதியா

யினமுடைய நலைமீது பணிகொளுல கதிலேறி
யெளிய வர்கள் கலி தீரவே
யிலகிவளர் வடிவேல குகமுருக குமரேச
வெனதுமன மலை வாசனே
யிகல்செய்பழ வினைமாய வுனதுதிரு வடிமேவ
வெளியனருள் பெறு நாளேதோ
வினிதினிது புவிவாழ்வ தெனவலகை யெனவோடி
யிடர்படுத லதுஞாயமோ
மினலொளிசெய் தளியேறு கருவைநகர் தனின்மேவு
விரதியர்கள் பணி பாதனே
மேருவிண் மகன்வேலை வாழுமண் மகனுய
வீரசண் முக நாதனே. ௬.

[தானதன தத்ததன தானதன தத்ததன தானதன தத்த தனனு]

மாரனை யெரித்துயிரை மீளவும ளித்தவிறை
மார்பினில ணைத்த சிறுவா
வானவர்த னக்குயிரு மானமுமெ ழிற்பதியு
மால்பெறவ ளித்த பெரியோ
யோரனை தனத்தில்வரு பாலினை யருத்தவுணு
மோர்தமிழ்ம றைக்கு ழவியே
யூரவர்ப ழிக்கவிது வேளையி லினித்ததமி
ழோகைமிகு நற்ச மயமே
பாரினி லிளைத்திடுதல் பாருனது நற்கிருபை
பாலியவை கொற்ற முறுமோர்
பாரமிது னக்கலது வேறெவர்த னக்குளது
பான்மொழிகு றத்தி கணவா
வீரவெம னக்குறைவு தீரவருள் வெற்பிறைவ
வேறுகதி யெற்கு மிலையே
மேருவிண் மகன்வேலை வாழுமண் மகனுய
வீரசண் முக நாதனே. ௰.

[தானன தானதன தானன தானதன தானன தான தான]

சேலேறி யாடுகொடி தானேறு மால்வழுதி
தேநாடு நாளும் வாழ்க
சீரான மாகருவை யூரார்க ளோகையொடு
தேசேறி நாளும் வாழ்க
வேலேறி யாருகர பூபால ரேவர்களு
மேலாகி நாளும் வாழ்க
வீறான மாதவர்கள் தேவார மாதிமுறை
வேதாதி யாவும் வாழ்க
நூலேறி யேயரசு தானாகி யாருதமிழ்
நோவாது நாளும் வாழ்க
நோயாதி தீரவழி தானோது மாசமய
நூலாதி யாவும் வாழ்க
மேலேறு பானுமதி யாதார மானமுகில்
வேதாவு மாலும் வாழ்க
வீறான வாறுமுக னேரேறு மாதிருவர்
வேல்வாழ்க வாழ்க மாதோ.

முற்றும் சுபம்.